**செய்தி வெளியீடு எண் : 2290** **நாள் : 16.11.2023**

**செய்தி வெளியீடு**

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் வட்டம், கருப்பாநதி நீர்த்தேக்கத்தில் உள்ள தண்ணீரின் அளவு மற்றும் எதிர்பார்க்கப்படும் நீர்வரத்தினை கருத்தில் கொண்டு, கருப்பாநதி பாசனத்தின் கீழ் பெருங்கால், பாப்பான்கால், சீவலன்கால், இடைக்கால், கிளங்காடுகால், ஊர்மேலழகியான்கால் ஆகியவற்றின் நேரடி மற்றும் மறைமுக பாசனம் மொத்தம் 9514.70 ஏக்கர் நிலங்களுக்கு 1433–ம் பசலி பிசான சாகுபடி செய்வதற்கு கருப்பாநதி நீர்த்தேக்கத்திலிருந்து 17.11.2023 முதல் 31.03.2024 வரை 136 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு வினாடிக்கு 25 கன அடி அளவுக்கு மிகாமல், பாசன பருவகாலத்தின் மொத்த தேவையான தண்ணீர் அளவான 1189.34 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது. இதன்மூலம் தென்காசி மாவட்டத்தில் 9514.70 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

**அரசு கூடுதல் தலைமை செயலாளர்**
**நீர்வளத்துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in